முகூர்த்த பட்டு புடவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (24 – 03– 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 117

# பேச்சில் ஏற்பட்டுள்ள தடங்கல் குறித்தும்

# பிரதமர் நரசிம்மராவுடன் சந்திரிகா ஆராய்வார்

## கென்னத் மீண்டும் யாழ். வருகிறார்

கொழும்பு, மார்ச் 24

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி ஜெயதேவ உயங்கொட ஆகியோர் இரண்டொரு தினங்களில் யாழ்ப்பாணம் செல்ல உள்ளனர் என்று நேற்றைய "திவயின" பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

இவர்கள் அரசதரப்பு தூதுக்குழுவாக இங்கு வருகின்றனர் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

அனேசமாக இவர்கள் அரசதரப்பின் முக்கிய செய்தியுடன் இங்கு வரலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-6)

## செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உதவிகள் இடை நிறுத்தம்

### சர்வதேச சம்மேளனம் அறிவிப்பு

கொழும்பு மார்ச்; 24

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கி வந்த உதவிகளை இடைநிறுத்தப் போவதாக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நிறுவனங்களின் சர்வதேச சம்மேளனம் அறிவித்துள்ளது.

ஆரம்ப சுகாதாரம், அனர்த்தங்களை எதிர்நோக்குதல், உள்நாடுகளில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் மற்றும் சுகாதார வசதிகளைச் செய்தல் ஆகியவற்றுக்கான நிதி உதவிகளை இந்த வருடத்தில் குறைக்கப் போவதாகவும் மேற்படி சம்மேளனம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் உதவியுடன் இலங்கையில் நடைபெறும் பல திட்டங்களை நேரடியாகக் கண்காணிப்பதற்கும் முடிவு செய்திருப்பதாக சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஜோர்ஜ் வெபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கலை முதற்தேர்வு கற்கை நெறி

## பரீட்சை எப்போது? மாணவர் குழப்ப நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கலை முதற் தேர்வு கற்கை நெறியில் கல்வி பயிலும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது கலை முதற் தேர்வுப் பரீட்சை தொடர்பாக குழப்ப நிலை அடைந்துள்ளர்ன

ஏப்ரல் 6 ஆம் திகதி இப் பரீட்சை நடைபெறுமென கொழும்பிலிருந்து உத்தியோக பூர்வமற்ற முறையில் கிடைத்த தகவலை அடுத்தே குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது

இதனை அடுத்து இப் பரீட்சை நடைபெறும் சரியான திகதியை பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கும்படி கலை முதற் தேர்வு மாணவர்கள் நேற்று அரச அதிபரை அணுகிக்கேட்டுள்ளனர்.

இது குறித்த சரியான தகவலை இன்று அறிவிப்பதாக யாழ் அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் உறுதியளித்துள்ளார். (ஒ- 7–10ம)

## சேதமடைந்த நோட்டுக்கள் புழக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

சேதமடைந்த 10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா. 100 ரூபா நோட்டுக்களின்புழக்கம் குடாநாட்டில் அதிகரித்து வருகிறது. இந்த நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளமைக்கு சந்தை வியாபாரிகளும் காரணம் என்று தெரிவிக்கப்டுகிறது.

சேதமடைந்த ரூபா நோட்டுக்கள் வங்கிக்கு வந்துசேராமல் சந்தைகளிலேயே அதிகம் சுழன்று வருவதாக இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

சேதமடைந்த நோட்டுக்களை வைத்திருப்போர் அவற்றை ஒரு தாளில் ஒட்டி இலங்கை வங்கியில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர் ஒருவரூடாக மாற்றிக் கொள்ளலாம்.

சேதமடைந்த தாளின்

[4.ஆம் பக்கம் பார்க்க]

### அந்நாட்டு மக்களை விட

## ஆஸியிலுள்ள இலங்கையர் கல்வியறிவு மிக்கவர்கள்!

மெல்பேர்ண், மார்ச். 24

ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்கள் ஆஸ்திரேலியர்களை விடவும் கல்வியறிவு கூடியவர்களாகவும், அதிக வருமானம் பெறுபவர்களாகவும் உள்ளனர். ஆஸ்திரேலியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

பெரும்பாலானவர்கள் அலுவலக உத்தியோகத்தர்களாகவும் அதாவது எழுதுவினைஞர், நிர்வாகிகள் போன்ற தொழில் செய்பவர்களாகவும் விளங்குகின்றனர்

இவர்களின் ஆண்டு வருமானம் சராசரி ஆஸ்திரேலியர்களின் ஆண்டு வருமானத்தைவிட மூவாயிரம் டொலர்கள் அதிகமானதாகவும் காணப்படுகின்றது.

இது பற்றி கருத்து வெளியிட்ட குடிவரவு, இனவிவகார அமைச்சர் செனேட்டர் நிக் போல்கஸ், இலங்கையர்கள் ஆங்கிலத்தில் மிகுந்த திறமைசாலிகளாக உள்ளனர் என்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அமைச்சர்கள், அதிகாரிகள் சகிதம் இன்று புதுடில்லி பயணமாகிறார்

கொழும்பு, மார்ச் 24

இந்தியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று புதுடில்லி பயணமாகும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா—

இனப்பிரச்சினைக்கு அரசு தயாரித்துள்ள உத்தேசத் தீர்வு, விடுதலைப் புலிகள் – அரசு பேச்சு, அந்தப் பேச்சில் ஏற்பட்டுள்ள தடங்கல் ஆகியன குறித்து இந்தியத் தலைவர்களுடன் விரிவாகப் பேசுவார்.

சந்திரிகா குமாரதுங்காவுடன் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், கிங்ஸ்லி விக்கிரமரத்னா மற்றும் செயலாளர் பாலபத்தபென்டி மற்றும் அதிகாரிகள் குழு புதுடில்லிக்குப் புறப்படுகிறது.

இந்தியாவுடன் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வளர்ப்பதே சந்திரிகாவின் இந்திய விஜயத்தின் நோக்கம் எனக் கூறப்பட்டாலும்—

இந்தியாவுடனான நட்புறவை மேம்படுத்துவதும், இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறுவதுமே உண்மையான நோக்கம் — என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தாம் விடுதலைப் புலிகளுடன் தொடங்கியுள்ள சமாதானப் பேச்சுக்களை இந்தியா எவ்வாறு நோக்குகிறது என்று அறிந்து அதன் ஆதரவை சந்திரிகா கேட்பார் என்றும் அறிபப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தாம் உத்தேசித்துள்ள தீர்வுத் திட்டம், சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல் என்பன குறித்துச் சந்திரிகா இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் தலைவர்களுடன் பேசுவார் என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கு தமிழீழ

(4 ஆம் பக்கம் பார்க்க

### 1990 ஆம் ஆண்டில்

## திருமலையில் ராணுவ நடவடிக்கை குறித்த பதிவு ஆவணங்கள் இல்லை!

### பிரிகேடியர் கொலையுண்டதால் இந்த நிலையாம்!!

திருகோணமலை, மார்ச் 24

திருகோணமலையில் இராணுவம் 1990 ஆம் ஆண்டில் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய பதிவுகள் மற்றும் ஆவணங்கள் எதுவும் இராணுவத்தின் வசம் இல்லை அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

வடக்கு - கிழக்கில் காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் இத்தகவல் வெளியானது

திருகோணமலையில் இராணுவத் தளபதியாக இருந்த பிரிகேடியர் லக்கி விஜேரத்தினா 1990 டிசம்பரில் கொலையுண்டதாலேயே இராணுவப் பதிவுகள், ஆவணங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் கூற முடியாதுள்ளது— என்று ஆணைக்குழுவின் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சாட்சியம் அளித்த பிரிகேடியர் ரி எம். எஸ் டி. தென்னக்கோன் தெரிவித்தார்.

இப்போது மன்னார் இராணுவ இணைப்பு அலுவலகத்தின் பணிபுரியும் பிரிகேடியர் தென்னக்கோன், தாம் 1990 ஜனவரி தொடக்கம் ஒக்ரோபர் வரை திருகோணமலையில் அப்போது தளபதியாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மோதல் தவிர்ப்பைப் பயன்படுத்தி அத்துமீறல் குடியேற்றங்கள்

## பி. பி. ஸி. இலங்கை மடலில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

தற்போது அமுலில் இருந்து வரும் போர் இடைநிறுத்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி அரசாங்க அதிகாரிகள் அத்துமீறல் குடியேற்றங்களை செயற்படுத்தி வருகின்றனர்.

பி.பி.ஸி. இலங்கை மடலில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மடலில் கொழும்பில் இருந்து ஜெகநாதன் என்பவரால் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடியேற்றம் தொடர்பாக புதிய ஐயப்பாடுகள் தோன்றியுள்ளன. தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசத்தில் தமிழர்களுடைய விகிதாசாரத்தைக் குறைக்கவேண்டுமென்ற தியநோக்கத்துடனேயே இதுவரை காலமும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை செய்து வந்துள்ளன.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தமிழ் - முஸ்லிம மக்களுக்கிடையில் முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்துவதில் வெற்றியும் காணப்பட்டது.

1977 களில் நடந்த வன்செயல்களின்போது கந்தளாய் தம்பலகாமம் பகுதிகளிலுள்ள தமிழர்கள் இடப்பெயர்ந்த பின் அங்கு முஸ்லிம்களும் சிங்களவர்களும் குடியமர்த்தப்பட்டனர்.

1988 இல் தம்பலகாமம் 68 ஆம் கிராமத்தில் ஊர்காவல் படையினரால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்ற போர்வையில் கொல்லப்பட்டார்கள். நூற்றுக்கணக்கான இளம் விதவைகள் மிகுந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப இந்தியாவிடம் சரண் அடையப் போறதா[illegible] தெரியுது பாருங்கோ...!

## மலையகப் பகுதியில் தொடர்ந்து இளைஞர்கள் கைது அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 24

அட்டன் பகுதியில், சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள் கைது செய்யப்படுவது மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடந்த ஞாயிறன்றும் இப் பகுதியில் [illegible] தமிழர்களை கைது செய்து [illegible] புக் காவலில் வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் தோட்டக்கமிட்டி தலைவர் ஒருவரும் அரசியல் கட்சி ஒன்றின் அமைப்பாளர் ஒருவரும் அடங்கியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

என்வீல்ட், ஸ்ரதடன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்தவர்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அட்டன் பகுதியில் கடந்த பலமாதங்களுக்கு முன்பும் இவ்வாறு சந்தேகத்தின் பேரில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறுகைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பில் எதிர்ப்புப் பேரணி:

## பிரேத பெட்டியுடன் பவனி வந்தனர்செய்தியாளர்கள்!

கொழும்பு, மார்ச் 24

''ஹிரு'' சிங்களப் பத்திரிகையின் செய்தியாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டதை கண்டித்து நேற்று கொழும்பில் பிரேதப் பெட்டியுடன் மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

செய்தியாளர்கள் பலரும் பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் ''பிரேத'' ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ''பிரேத'' பவனியின் முன்னால் மலர் வளையங்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

வெகுவிரைவில் பத்திரிகைச் சுதந்திரம் பூரணமாகப் புதைக்கப்பட்டு விடும் எனச் செய்தியாளர்கள் பலரும் கண்டித்துள்ளனர். [ஒ-6]

## மட்டக்களப்பு மேயர் வீடு சுற்றிவளைத்து சோதனை

மட்டக்களப்பு, மார்ச் 24

மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் பேரின்ப நாயகத்தின் வீட்டை படையினர் சுற்றிவளைத்துச் சோதனையிட்ட சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது

சம்பவதினம் இரவு மட்டக்களப்பு நகரைச்சுற்றி வளைத்தபடையினரே மட்டக்களப்பு மாநகர மேயரின் வீட்டையும் சோதனையிட்டனர்—

படையினர் வந்த போது தாம் மேயர் என்று தெரிவித்தும்கூடபடையினர் அதனைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவில் பகுதியில் புலிகளின் முகாம்கள்!

கொழும்பு, மார்ச். 24

மட்டக்களப்பு மாவட்டம் பொத்துவில் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இரு புதிய முகாம்களை அமைத்துள்ளனர் என்று நேற்றைய 'லங்காதீப' பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

அப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆயுதமின்றி நடமாடி வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அரசின் முதலாவது பட்ஜெட் ஏகமனதாக நிறைவேறியது

### எதிரணியினரும் எதிர்ப்பில்லை

கொழும்பு, மார்ச் 24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முதலாவது வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

அரசினதும், எதிர்க்கட்சியினதும் எம்.பிக்கள் எவரும் எதிர்த்து வாக்களிக்காதது குறிப்பிடத்தக்க அம்சம் என்றும்—

வரவு — செலவுத் திட்டம் ஒன்று எதிர்ப்பு எதுவுமின்றி அங்கீகரிக்கப்பட்டமை இதுவே முதல் முறையாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## வெளியூர் தபால் விநியோகம்

வடமராட்சி, மார்ச் 24

கோமாரி கப்பலில் வந்த தபால்கள் இன்று வெள்ளிக்கிழமை விநியோகம் செய்யப்படவுள்ளன.

இக்கப்பலில் வந்த 244 தபால் பொதிகளும் நேற்றுப் பிற்பகல் இறக்கப்பட்டு யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை நேற்று முன்தினம் (புதன்) சிடான்ஸர் கப்பலில் வெளியூர்களுக்கான 18 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

## கோமாரியில் ஓய்வூதிய வவுச்சர்கள்

ஓய்வூதியர்களுக்கான பென்சன் வவுச்சர்கள், ஒருதொகுதி தேசிய அடையாள அட்டைகள், பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் என்பன கோமாரி கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

சில தினங்களில் இவை இறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (ஒ-173)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### இலகு திருமண சேவை

பராவஸ பரஜா உரிமையுடைய Reotaurant உரிமையாளர் வயது 27, உதயச் செவ்வாய் நட்பு, கி. பா.8-36 மணமகனுக்கு பூரம், சதயம், சித்திரை, அவிட்டம், திருவாதிரையில் மணப்பெண் தேவை. விமலா, நாச்சிமார் கோவிலடி. [35856]

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. பகுதியாகவும் இருக்கலாம். கொக்குவில், ஆனைக்கோட்டை பகுதிகளும் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க: த. ஜெயக்குமார், தாவடி, கொக்குவில் (35835)

### ஆசிரியர் கைநூல்

ஆண்டு 4—11 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ''மதிப்பீடு'' கைநூல்-வினாத்தாள் தயாரித்தல் முதல் பரீட்சை, பகுப்பாய்வு நடவடிக்கைகள் வரை மாதிரிப்படிவங்களுடன் அமைந்த சிறந்தநூல்- விலை 30/- யாழ் ஸ்ரீசுப்பிரமணியம், ஸ்ரீலங்கா, சுன்னாகம் தனலக்குமி பொத்தகசாலைகளில் கிடைக்கும் [8294]

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டிச்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

### றோணியோ பிரதி

தேவையான முறையில் குறித்த தவணையில் றோணியோ செய்துகொடுக்கப்படுகிறது 100 பிரதி இரண்டு பக்கமும் 30/- மட்டுமே. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கருகில்] யாழ்ப்பாணம் [சி-628]

### புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் கணக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில்/ பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (8357)

### காயத்திரி வெளியீடுகள்

ஆண்டு 6, 7, 8, 9, 10, 11க்கான வே. நவமோகனின் இலகு தமிழ் இலக்கணம் (திருத்திய பதிப்பு) ரூபா 25/- மாற்றம் – முத்திங்கள் சஞ்சிகை ரூபா 15/- எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். [35783]

### பயிற்சி வினாத்தாள்கள்

முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ் Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன எல்லா பிரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் (8390)

### கணக்காளர் தேவை

யாழ். நகரிலுள்ள தொழில் நிறுவனத்திற்கு சிறிய கணக்குகள் பார்ப்பதற்கு பெண் கணக்காளர் தேவை. காலை 8-00 மணிக்கு முன் நேரில் வரவும். சாயி இல்லம், இல. 68A, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [35834]

## அநாதரவான நிலையில் சிசுவின் சடலம்

தென்மராட்சி, மார்ச் 24

சாவகச்சேரி டச்சு வீதியில் அநாதரவான நிலையில் காணப்பட்ட சிசு ஒன்றின் சடலம் சாவகச்சேரி காவல் துறையினரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை காவல் துறையினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ-5 117)

---

## நல்லூர் ஓய்வூதியர் நலன்புரி சங்கம்
## 13 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 26-03-95 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30

இடம்: திருநெல்வேலி இ. த. க. பாடசாலை (சந்தையின் பின்பக்கம்)

★ தலைவர்; திரு. பூ. க. இராசரத்தினம் அவர்கள்

★ பிரதம விருந்தினர்: திரு. சு. சிவபாலன் அவர்கள் பிரதம கணக்காளர், யாழ். கச்சேரி

★ சிறப்பு விருந்தினர்: திரு. கா. வீரசிங்கம் அவர்கள் கணக்காளர், ஓய்வூதியக்கிளை, யாழ். கச்சேரி

அங்கத்தவர்கள் அழைக்கப்படுகின்றார்கள்

சி. கந்தமூர்த்தி
கௌரவ செயலாளர்

''கோபால் இல்லம்''
6, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(35838)

---

வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

## தற்காலிக லொறிச் சாரதி குழாம் பதவிக்கான விண்ணப்பம்

மேற்படி சங்கத்தினால் தற்காலிக லொறிச்சாரதி குழாமிற்கான விண்ணப்பங்கள் கீழ்க்காண் தகைமை கொண்ட மேற்படி சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 5-4-95 ஆகும். விண்ணப்பங்கள் யாவும் ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு 31-3-95 ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப உறையில் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. வயது 20 — 40 வருடங்கள்
2. தகைமை; 5ஆம் வகுப்பு சித்தியும் லொறி ஓட்டும் அனுமதிப்பத்திரமும், 1 வருட அனுபவமும்.

— பொது முகாமையாளர்

நீர்வேலி,
1995-3-18.

[சி-838]

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 20 – 10 – 1967

விண்ணில்: 08 – 02 – 1995

டோகாவில் கார் விபத்தில் அகால மரணமடைந்த

### அமரர் சரவணமுத்து மோகன்

குடும்ப சுபீட்சத்தையே கொள்கையாக கொண்ட எம் குல விளக்கே! வாழவேண்டிய நேரத்தில் அகாலமாய் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த மோகனின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

எமது துயரத்தில் பங்கு கொண்ட யாவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கிறோம்.

— அன்னாரின் குடும்பத்தினர்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

[35858]

---

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 28 – 07 – 1971

உதிர்வு: 24 – 03 – 1893

### ஞானசூரியர் வில்சன் நிக்கலஸ்

[யாழ் 14 ஆம் அணி மருத்துவபீட மாணவன்]

பல்கலை வாசலில் பாதம் பதித்த நாள்
நல்லிசை பாடிய நலமுடை நண்பனே!
இல்லை நீ இன்று எம்மிடை எனினும்
கல்லினில் எழுத்தாய் எம்முளம் நிலைத்தாய்
மறக்கவா முடியும் மனதினில் அன்பாம்
மலர்களைத் தூவி அஞ்சலி செய்தோம்
மானுட மணியே உறுக நீ சாந்தி.

14 ஆம் அணி மருத்துவபீட
மாணவர்கள்.

[35833]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### அப்பாப்பிள்ளை தர்மலிங்கம்

அன்னை மடியில்: 13–08–1914

ஆண்டவன் திருவடியில்: 03–04–1994

திதி: 24—3—1995

அன்பும், அறிவும், அருமைப் பண்பும் நிறைந்த எங்கள் குடும்ப விளக்கே! எந்தவித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய உங்கள் குல தெய்வமாகிய விசவத்தனை முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

''குமரகிரி''
பண்ணாகம்,
சுழிபுரம்.

(சி/835)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 17 – 03 – 1944

இறைவன் மடியில்: 04 – 04 – 1994

### அமரர் சின்னத்தம்பி வீரசிங்கம்

திதி: 24 – 03 – 1995

ஒரு பொதுவுடமை தொண்டனாக விளங்கி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எம் அன்புக் குடும்பத் தலைவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்,

— குடும்பத்தினர்.

உடுவில் மேற்கு.
சுன்னாகம்.

[35857]

---

## 1ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



மலர்வு: 14 – 03 – 1939

உதிர்வு: 24 – 03 – 1994

### அமரர் இராமசாமி செல்வராஜா

[மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா.]

துன்பத்தை உணராமலே இன்பமாக வாழ்ந்திருந்தோம்
மின்னாமல் முழங்காமல் விழுந்ததே இடி எம்மீது
ஓராண்டு சென்றும் ஆறவில்லை எம் துயரம்
உம்மோடு சேர்ந்து உயர்வாக வாழ்ந்ததனை
என்றுமே மறவோம் மறவோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்
சகோதரர், உறவினர்.

கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(8397)

---

## பாடசாலை நிகழ்வுகள்

நவாலி தெற்கு அமெரிக்க மிஷன் த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு முரசொலி விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (ஒ-20)

★ ★ ★

தென்மராட்சி, மார்ச். 24

கொடிகாமம் இயற்றாலை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. குமாரசிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-117)

★ ★ ★

தென்மராட்சி, மார்ச். 24

மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (இ-117)

★ ★ ★

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (இ-28)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல உடலாளர் போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் 1-30 மணிக்கு, கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ச. குகதாசன் கலந்து கொள்வார். (ஐ-161-5)

★ ★ ★

அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அதிபர் திரு. ஆ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டி. ஆர். அருமைநாயகம் கலந்து கொள்வார். (ஐ-14)

★ ★ ★

சங்கானை ஸ்தான அ. மி. த. க. பாடசாலை விளையாட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஓடக்கரை முகாமுக்கு அருகிலுள்ள மைதானத்தில் அதிபர் திருமதி நா. செல்லையா தலைமையில் நடைபெறும்

பிரதமவிருந்தினராக வலி. மேற்குபிரதேச செயலரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா கலந்து கொள்வார். (ஐ-14-135)

★ ★ ★

அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பாடசாலை அதிபர் திருமதி சி. சிவபாலன் தலைமையில் நிலாவெளி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா கலந்து கொள்வார். (ஐ-14-100)

★ ★ ★

பெரியபுலம் மகாவித்தியாலயமும் வேலணை சரஸ்வதி வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

முதன்மைவிருந்தினராக நல்லூர்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. இராஜமணி கலந்துகொள்வார். [ஐ-14]

★ ★ ★

யாழ்ப்பாணம் சென். பீற்றர்ஸ் சிறுவர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமைபிற்பகல் 3-00மணிக்கு றிம்மர் மண்டப மைதானத்தில் நடைபெறும்.

வட இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஞானசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி டி. ஞானசீலன் பரிசுகளை வழங்குவார். [இ]

★ ★ ★

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி ச. சிவராஜா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக உடுவில்கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. க. இரத்தினராசா கலந்துகொள்வார். (ஐ-14)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அதிபர் திரு. ஆ. சோதிலிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் ஆ. பஞ்சலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-17)

## பொதுசன உதவிப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வேலணை மற்றும் புங்குடுதீவு அஞ்சல் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு மாசி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் நேற்று முதல் வழங்கப்படுகின்றன. (ஐ-5)

## கண்காட்சி

கச்சாய் அரசினர் கலவன் வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமான ''கற்பித்தல் உபகரணக் கண்காட்சி'' தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமையும் மாலை 5மணி வரை இடம்பெறும்.

கண்காட்சி ஆரம்ப விழாவில் தென்மராட்சி பிரதேச பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். [ஐ-5-31]

---

## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க உறுப்பினரும் சிறந்த உதைபந்தாட்ட வீரருமாகிய

### திரு. ஜெ. பாலசுப்பிரமணியம் (பாலா)

20 – 3 – 95 (திங்கள்) அன்று கனடாவில் காலமாகிவிட்டார் அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
திருநெல்வேலி
இந்து வாலிபர் சங்கம்

(35864)

---

## 31-ம் நாள் நினைவலைகள்

யாழ். மணிக்கூட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பரந்தன், கண்டி வீதியில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற

சட்டத்தரணி இராசையாவின் கனிஷ்ட புதல்வன்

### இராசையா சிதம்பரேஸ்வரன்

கொழும்பில் 22 – 2 – 95 அன்று காலமாகி இன்று அவரது 31 ஆவது நினைவு நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
நண்பர்கள்,
மத்திய தாயின் பழைய மைந்தர்கள்.

[35868]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அபிவிருத்திக்கு நிதி உதவிகள்

வவுனியாவில் உள்ள குளங்களைப் புனரமைப்பதற்கென வெளிநாடுகள் வழங்கிய நிதி இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது வெளிச்சத்துக்கு வந்துள்ளது

வவுனியாவின் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதி மட்டுமன்றி, தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கென வெளிநாடுகள் வழங்கியபணம் முழுவதுமே இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பது இப்போது கல் மேல் எழுத்தாகி விட்ட ஒன்று.

1983ஆம் ஆண்டிலிருந்தே ''பாதுகாப்புக் காரணங்கள்'' என்ற மேலட்டையைப் போட்டுக் காட்டி, தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியை ஐ. தே. கட்சி அரசு முற்றாக புறக்கணித்து வந்தது.

ஈழப்போர் இரண்டு தொடங்கியதும், தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தி என்று ஒன்று இருப்பதையே அது மறந்து போயிற்று!

நான்கரை வருடமாக நடைபெற்ற இரண்டாவது ஈழப்போரின் போது அரசாங்கத்துக்கு 11,000 கோடி ரூபா செலவாகியது என்பது உத்தியோகபூர்வ கணக்கு. (தெற்கின் மிகப் பிரமாண்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கே 5,500 கோடி ரூபா தான் செலவாகியது என்பது குறிப்பிடத்தக்கது) போருக்குச் செலவிட்ட 11,000 கோடி ரூபாவும் அரசாங்கத்தின் சொந்தப் பணமா? இதில் 95 சதவீதமும் வெளிநாடுகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கென்று வழங்கியதே. இதில் எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை. சந்தேகமும் இல்லை.

இந்த இலட்சணத்தில்தான், வடக்கு-கிழக்குப் புனரமைப்புக்கென 3,900 கோடி ரூபா செலவில் ஒரு திட்டத்தை வரைந்து அதற்கென வெளிநாடுகளிடம் இருந்து நிதி உதவி பெறுவதற்கு புதிய அரசு அவசரப்படுகிறது

சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வடக்கு-கிழக்குப் போரை நிறுத்துவதென்றோ, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே காண்பதென்றோ அது இன்னும் அறுதியிட்டு முடிவு செய்யவில்லை. அரசியல் தீர்வுக்கு — தான் நினைத்த தீர்வொன்றை திணிப்பதற்கு — முயல்வது. அது வெற்றிதராவிடில் இராணுவத் தீர்வையே நாடுவது என்ற வஞ்சகமான உள்நோக்கத்துடனேயே அரசு செயற்படுகிறது.

அவ்வாறில்லையெனில், பூநகரி இராணுவ முகாமை அகற்றினால் பாரதூரமான விளைவுகள் உண்டாகும்; தேசிய பந்தோபஸ்துக்கு கெடுதல் விளையும் என்றெல்லாம் சந்திரிகா கருத்து வெளியிட்டிருக்க நியாயமில்லை. தமிழ் மக்களின் பிரச்சினையோடு போரியல் தேவைகளை தொடுத்துப் பார்க்க வேண்டிய அவசியமே எழமாட்டாது.

போரை நிறுத்தி அரசியல் தீர்வைக் காண்பதே அரசின் முடிந்த முடிவாக இருந்தால், அந்த முடிவில் அது நேர்மையாக இருந்தால், இப்போது நடைமுறையில் உள்ள மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக்குவதில் அரசு தீவிர அக்கறை காட்டியிருக்கும்.

ஆனால் அரசின் செயற்பாடும், அணுகுமுறையும் அதற்கு எதிர்மாறானவையாகவே உள்ளன. சமாதானப் பேச்சு என்று கூறிக்கொண்டு, பீரங்கி வண்டியைக் கழற்றிப்பூட்டி, கறள் நீக்கி எண்ணெய் பூசும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது அரசு!

வடக்குப் பகுதி புனரமைப்புக்கு — அபிவிருத்திக்கு — நிதி உதவும் நோக்கோடு பன்னிரண்டு மேற்கு நாடுகளின் அரச பிரதிநிதிகள் இம்மாத முற்பகுதியில் இங்கு வந்து போனார்கள்.

தமிழ்ப் பகுதிக்கென வழங்கப்படும் நிதி உதவி எந்த வகையிலும் ஸ்ரீலங்கா அரசுக்கான பொதுவான உதவியாக வழங்கப்படக் கூடாது என்பதிலும், அந்த நிதி வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் உறுதி செய்வதிலும் அந்நாடுகள் வெகுகவனமாக இருக்க வேண்டும். அதுவே தமிழர் எதிர்பார்ப்பு.

பணிப்பெண் மரணதண்டனை விவகாரம்:

# சிங்கப்பூர் - பிலிப்பீன்ஸ் ராஜீக உறவு முறிந்தது!

## தூதர்கள் திருப்பி அழைக்கப்பட்டனர்!!

மணிலா, மார்ச் 24

பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவர் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்ட சம்பவத்தை அடுத்து எழுந்த முறுகல் நிலையைத் தொடர்ந்து இரு நாட்டு அரசுகளும் தமக்கு இடையிலான ராஜீக உறவுகளை துண்டித்துக் கொண்டன.

இரு நாடுகளும் தத்தமது நாட்டுத் தூதர்களை நேற்று திருப்பி அழைத்துக் கொண்டன.

தமது நாட்டுப் பெண்கள் பணிப்பெண்களாக வேலை தேடி சிங்கப்பூர் செல்வதை பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் தடைசெய்துள்ளார்.

கடந்த வாரம் பிலிப்பீன்ஸ் நாட்டு பணிப்பெண்ணான புளோரின் என்பவரை கொலைக் குற்றச்சாட்டுகளின் பேரில் சிங்கப்பூர் அரசு தூக்கிலிட்டது. அதனை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

பிலிப்பீன்ஸ் இராணுவத் தளபதி சிங்கப்பூருக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஏற்கனவே ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

சிங்கப்பூருடனான கூட்டு கடற்படைப் பயிற்சியும் ரத்துச்செய்யப்படுவதாக பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் அறிவித்துள்ளார்.

சிங்கப்பூர் அரசின் செயலால் ஆத்திரமடைந்துள்ள பிலிப்பீன்ஸ் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

சிங்கப்பூர் நாட்டு தேசியக் கொடி எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து சிங்கப்பூர் அரசு வெளியிட்ட கடும் கண்டனத்தை தாம் நிராகரிப்பதாகவும் பிடல் ராமோஸ் தெரிவித்துள்ளார். [ஜ-4-7]

# மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மோட்டார் ஊர்தி உரிமை மாற்றம் தொடர்பாக போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் ஊர்தி உரிமையாளர்களுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். அவை பின்வருமாறு:

★ தமிழீழ பிரதேசத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்ட மோட்டார் ஊர்தி ஒன்றினை உரிமைமாற்றம் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் புதிய உரிமையாளரிடமிருந்து ஒப்புதல் கடிதம் ஒன்றைப் பெற்று உரிமை மாற்றம் செய்யப்பட்ட திகதியிலிருந்துஏழு[07] நாட்களுக்குள் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளரின் பணிமனைக்கு தனது குடும்ப அட்டையுடன் நேரில் சென்று அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் மோட்டார் ஊர்தியின் உரிமையாளர்கள் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளரினால் நிர்ணயிக்கப்படும் அவ்வூர்தியின் பெறுமதிக்கு ஒத்த ஒரு தொகையைச் செலுத்தல் வேண்டும்.

★ மோட்டார் ஊர்தியொன்றின் உரிமை மாற்றத்தை ஒப்புக்கொண்டு கையொப்பமிட்ட திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்குள் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளரின் செயலகத்திற்கு தனது குடும்ப அட்டையுடன் நேரில் சென்று சமுகம் கொடுத்து அவ்வூர்தியினைத் தனது பெயரில் பதிவுக்குட்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் புதிய உரிமையாளரிடமிருந்து அத்தகைய மோட்டார் ஊர்திகள் தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவாளரினால் கையேற்கப்படும்.

★ தமிழீழ பிரதேசத்தை விட்டு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தனது குடும்பத்துடன் வெளியேறும் மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அவ் ஊர்தி தொடர்பான முழு விவரத்தினையும் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அவ்விதம் வெளியேறும் எவரேனும் ஒருவருடைய மோட்டார் ஊர்தி எதனையும் தமிழீழத்தில் வதியும் எவரேனும் ஒருவர் தனது பெயரில் பதிவு செய்யாமல் உடமையில் வைத்திருந்தால் அல்லது உபயோகித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய மோட்டார் ஊர்திகள் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளரினால் கையேற்கப்படும்.

★ தமிழீழ பிரதேசத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்ட மோட்டார் ஊர்தி ஒன்றின் உரிமை மாற்றம் தொடர்பாக இன்றுவரை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளருக்கு தெரியப்படுத்தாது பதிவு செய்யப்பட்ட மோட்டார் ஊர்தியின் உரிமையாளர் எவரேனும் ஒருவர் அல்லது அத்தகைய மோட்டார் ஊர்தி ஒன்றைக் கொள்வனவு செய்து தனது பெயரில் பதிவுக்குட்படுத்தாமல் தனது கடமையில் வைத்திருக்கும், அல்லது உபயோகிக்கும் எவரேனும் ஒருவர் இவ்வறிவித்தல் வெளியான திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவாளரின் செயலகத்திற்கு தனது தனது குடும்ப அட்டையுடன் நேரில் சென்று உரிமை மாற்றத்திற்கான ஒப்புதல் கடிதத்தினைச் சமர்ப்பிக்கும்படியும் தமது பெயரில் பதிவுக்குட்படுத்தாமல் தமிழீழத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்ட மோட்டார் ஊர்தி ஒன்றினைத் தமது உடமையில் வைத்திருப்பவர்கள் தமது குடும்ப அட்டையுடனும் அவ்வூர்தியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருடனும் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்திற்கு நேரில் சென்று அத்தகைய மோட்டார் ஊர்திகளைத் தமது பெயரில் பதிவுக்குட்படுத்திக்கொள்ளுமாறு ஊர்தி உரிமையாளர்களுக்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஜ)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 24

தமிழ்சோதிடர் ஆய்வு ஒன்றியம் நடத்தும் வாராந்தக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

திரு. எஸ். சி. இம்மனுவேல் ''வானியல் ஓர் அறிமுகம்,, எனும் பொருளிலும்— திரு. சி. சதானந்தன் ''இந்து சோதிடத்தில் வெளிநாடுகள்'' எனும்பொருளிலும் உரையாற்றுவர். [ஜ 5-7]

## கனடாவில் திருவாசகப் பெருவிழா

கனடாவில் இயங்கும் இந்து சமய அமைப்புகள் நடத்திய திருவாசகப்பெருவிழா கடந்த டிசம்பர் மாதம் றிச்மன்ட் ஹில் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விசேட பூசை வழிபாடுகள், திருவாசக முற்றோதுதல், திருவாசகம் பற்றிய உரைகள் என்பன இடம்பெற்று— ''திருவாசகத் தேன் துளிகள்'' என்னும் நூலும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து வருடம் தோறும் இதனை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-14)

## புலிகளின் குரல் வானொலியில்

24 — 03 — 1995

வெள்ளி இரவு

- ★ 8-02 — கலைமஞ்சரி— அறிமுகம் — ''நாற்று'' சஞ்சிகையின் முதல் இதழ். சிறுகதை —பாரதிப்பிரியா எழுதிய 'காற்றில் என் இனியவள்'' கவிதை — கவிப்பிரியா எழுதிய ''வார்த்தை''
- ★ 8-25—களப்பொழுது— போராளி வ. செல்வராசா எழுதிய ''லெப் ரினன்ட் மயூரன்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — சமகாலப் பார்வை
- ★ 8-50 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''கொடித் தோடை'' — கேள்வி பதில்

25 — 03 — 1995

சனி காலை

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை.
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — கணநேரக் காவியங்கள்.
- ★ 5-30 — மண்ணின் குரல்
- ★ 5-40 — நேயர் கடிதங்கள்
- ★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — நாடகம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## திருமணம்செய்யமுடியாது பெண் சிப்பாய்கள் விரக்தி!

கொழும்பு, மார்ச் 24

வடக்கு — கிழக்கு எல்லைக் கிராமங்களிலுள்ள காவலரண்களில் — பணியில் ஈடுபட்டுள்ள பெண் பொலீஸாருக்கும், பெண் சிப்பாய்களுக்கும் வழமைப்பிரகாரம் இடமாற்றங்கள் வழங்கப்படுவதில்லை.

அதனால் தாம் திருமணம் புரியும் வாய்ப்புகளைக் கூட இழக்கவேண்டி ஏற்பட்டுள்ளது குறித்து அவர்கள் அதிருப்தியும், கவலையும் கொண்டுள்ளதாக படை வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

அவர்கள் தமது சொந்தக் கிராமங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்த போதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இரண்டு மூன்று வருடங்களுக்கு அதிகமாகவும் எல்லைக் கிராமங்களில் தொடர்ச்சியாகப் பணிபுரியும் இவர்கள் விரக்தி காரணமாக சேவையிலிருந்து விலக முற்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (14-6)

## சிறுவர் மேம்பாடு கருதி 4 பாடசாலைகள் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 24

பின்தங்கிய பிரதேச மக்களின் கல்வி மேம்பாட்டிற்கென சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் நான்கு சிறுவர் பாடசாலைகளைத் திறந்துள்ளது.

மல்லாகம் கோட்டடி, ஏழாலை, ஈவினை, அல்லாரை ஆகிய இடங்களிலேயே இந்த நான்கு பாடசாலைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை — இப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு போஷாக்குஉணவு வழங்கும் வைபவம் அண்மையில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தே. மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது. (ஜ-5-17)

## பொய்யும் புகலாதே; உண்மையும் உரையாதே

மிகச் சிறந்த ஞானநிலை சும்மா இருத்தல். இது காலம், இடம், பதவி, பட்டம், பரிசு, பாராட்டு முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது. தத்துவம் முப்பத்தாறுக்கும் அப்பாற்பட்ட சமயாதித நிலை இது. இதிலே தேர்ந்தவர்களில் ஒருவர் கௌரிபாலா சுவாமிகள் என்னும் ஜேர்மன் சுவாமிகள்.

இவரது ஆக்கமே சும்மாவிருக்க சூத்திரம். சுமார் 200 பக்கங்கள். அவற்றில் சில சும்மா இருப்பவை. பல இரண்டு அல்லது நான்கு வரிப்பாடல்களை உடையன. இந்நூலில் ஐம்பது பிரதிகளே அச்சிடப்பெற்றன. ஏழு அதிகாரங்கள். நான்காவது தாயுமானவர்.

அதில் 32 பிரிவு, பாடல்கள். பொருளடக்கம் நூலின் இறுதியில் உள்ளது. அதிலே தான் பாடல்களைப் பாடியவர்களின் பெயர்கள் உள. சில பாடல்கள் 'குருநாதன்' பெயரில் உள. குருநாதன் யார்? சீடர் யார்? என்பது அடியில் உள்ள திருப்பாடலால் அறியலாம்

யோகசுவாமிகளின் பாடற் தொகுப்பாகிய நற்சிந்தனை

சும்மாவிரு கவுரிபாலா
அம்மா பொருளறியேன்
ஒருபொல் லாப்புமில்லை
எப்பவோ முடிந்தது
நாம்ஒன்று மறியோம்
முழுதும் உண்மைதம்பி

யில் இந்நூற் பாடல்கள் இடம் பெற்றில.

இது சிவதொண்டன் மலர் 39 இதழ் 4 பங்குனி 1975 இதழில் இடம் பெற்றுள்ளது. 56 பிரிவு பெரும்பாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வசனம்.

அதில் 46. சித்திரைப் போல இரு. 47. ஊமை எழுத்தை அறி. 41. பேசிக்

### ஞானக்கதிர்

கொண்டு மௌனமாக இரு. 40. பாராமல் பார்த்திரு. கேளாமல் கேட்டிரு. பேசாமல் பேசு. 56. பொய்யும் புகலாதே; உண்மையும் உரையாதே.

இதனை ஆக்கியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. யோகசுவாமிகள் என்பது அறிவிக்காமல் அறிவிப்பது.

[நன்றி:
சிவஞானப்பிரகாச
வெளியீடு,
மெய்கண்டதேவர் ஆதீனம்,
யாழ்ப்பாணம் ]

தாலோ தாலே லோ
தாலோ தாலே லோ
தாலோ தாலே லோ
தாலோ தாலே லோ
தாலோ தாலே லோ
தாலோ தாலே லோ

# முற்போக்கு முலாம் பூசிய முகமூடி அணிந்த பேரினவாதி சந்திரிகா

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் பங்குனி மாத இதழில் ''சந்திரிகா குமாரதுங்கா: சமாதான முகமூடி அணிந்த பேரினவாதி'' என்ற தலைப்பில் வெளியான ஆசிரிய தலையங்கத்தை இங்கே தருகிறோம்.

சந்திரிகா அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கடந்த மூன்று மாத காலமாக நடைபெற்று வந்த அமைதிப் பேச்சுக்கள் அஸ்தமிக்கும் நிலைக்குச் சென்று விட்டன. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கம் மீன்பிடித் தடை நீக்கம், பூநகரி முகாமை அகற்றி ஒரு பாதை திறப்பது என்பவற்றைச் சந்திரிகா அம்மையார் முழுமையாகவே நிராகரித்ததைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுக்கள் தோல்வியுறும் நிலைக்குச் சென்றுள்ளன.

தமிழ் மக்களின் அத்தியாவசிய — அன்றாடத் தேவைகளான இவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் 'பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும்' என்றும்; எனவே, தேசிய பாதுகாப்பை அரசு விட்டுக் கொடுக்காது என்றும் காரணம் கூறி, சந்திரிகா அம்மையார் அவற்றை நிராகரித்துள்ளார். 09-03-1995 ஆம் திகதியிட்டு தலைவர் பிரபாகரனுக்கு வரைந்துள்ள மடலில், ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இவ்விதம் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

தமது அன்றாடப் பிரச்சினைகளையும் அத்தியாவசியத் தேவைகளையும் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள முனைவது என்பது, ஸ்ரீலங்காவின் தேசிய பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கக் கூடியது என்ற சந்திரிகா அரசின் கருத்தையே, இது குறித்துக் காட்டுகின்றது.

இன்னும் ஒரு வகையில் சொல்லப்போனால், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் வாழ்வு என்பது ஸ்ரீலங்காவின் தேசிய பாதுகாப்பிற்குக் ஆபத்தானது என்று சந்திரிகா அரசு பிரகடனப்படுத்தி உள்ளதாகவே, எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது சந்திரிகா அம்மையாரின் அறிவிப்பிலிருந்து ஒரு விடயத்தைத் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அது என்னவெனில் உணவு, மருத்துவம், தொழில், [illegible] போன்ற அடிப்படைத் தேவைகளை அரசு [illegible] போதும் தமிழ் மக்களுக்கு

## ''விடுதலைப் புலிகள்'' இதழ் சாடுகிறது

வழங்க மாட்டாது. ஏனெனில் அவை ''பாரதூரமான இராணுவ விளைவுகளைக் கொடுக்கும்'' என்று அரசு எண்ணுகின்றது.

சந்திரிகா அம்மையார் எடுத்துள்ள இந்த அரசியல் நிலைப்பாடு, ''சிங்கள இனத்தின் பாதுகாப்பிற்கு தமிழர்கள் அச்சுறுத்தலாக உள்ளார்கள்'' என்ற பேரினவாதிகளின் இனவாத சித்தாந்தத்தை நியாயப்படுத்துவதாகவே உள்ளது

இதன் மூலம், இதுவரை நாளும் சந்திரிகா அம்மையார் அணிந்திருந்த முற்போக்கு முலம் பூசப்பட்ட சமாதான முகமூடி கழன்று, அவரின் பேரினவாத முகத்தை உலகிற்குக் காட்டி விட்டது. இராணுவ அணுகுமுறைதான் தமிழர் இனப் பிரச்சினைத் தீர்வுக்குரிய மார்க்கம் என்பதை, சந்திரிகா அம்மையார் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

பேச்சுவார்த்தையை அரசு காலங்கடத்திவந்த ஒவ்வொரு [illegible] சினைக்கு ஒரு அரசியல் தீர்வு [illegible] மீது புலிகள் சந்தேகம் தெரிவித்தே வந்துள்ளனர். புலிகள் வைத்திருந்த சந்தேகம் முழு உண்மை என்பதை, சந்திரிகா அம்மையார் இப்போது நேரடியாகவே நிரூபித்துள்ளார். இதுவரை நாளும் ஸ்ரீலங்காவை ஆட்சிசெய்த அனைத்து ஆட்சியாளர்களைப் போலவே சந்திரிகா குமாரதுங்காவும் தமிழின விரோத உணர்வு கொண்ட ஒரு பேரினவாதிதான் என்பதை, தமிழ்மக்களும் அறிந்து கொண்டுவிட்டனர். இதைச் சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ் மக்கள் அறிய உதவிய —சந்திரிகா அம்மையார் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய - இறுதிக் கடிதத்திற்கு கோடி நன்றிகள்.

இராணுவத் தலைமையின் அழுத்தத்திலிருந்து தப்புவதற்காக, வேறு வழியின்றி சந்திரிகா அம்மையார் இவ்விதம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என, சில தென்னிலங்கைப் பிரமுகர்கள் நியாயம் கூற முனைகின்றனர். இது சிறுபிள்ளைத்தனமான ஒரு நியாயம் என்பதுடன், இந்த நியாயப்படுத்தல்களின் பின்னால் பேரினவாத சித்தாந்தத்தின் செல்வாக்கும் உள்ளதை எவரும் மறுக்க முடியாது.

இராணுவத் தளபதிகளைக் கடுமையாக விமர்சித்து, முப்படைத்தளபதியைப் பதவியிலிருந்து விரட்டி, முன்னாள் தளபதிகள் மீது விசாரணைக்கென ஆணைக்குழுக்களை நியமித்துத் தனது அதிகாரங்களைக் காட்டி வந்த சந்திரிகா அம்மையார், தமிழரின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கமுயலும்போது மட்டும் இராணுவத்தைக் கண்டு அஞ்சுகின்றார் என்று சொல்வதை, யார்தான் நம்புவார்கள்?

அத்துடன், போரைநிறுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சந்திரிகா அம்மையாரின் தனிப்பட்ட கொள்கை அல்லவே! சிங்கள மக்கள் கொடுத்த தேர்தல் ஆணை அல்லவா அது? அந்த மக்கள் ஆணைக்கு அவர் என்ன பதில் சொல்லப்போகின்றார்?

ஓர் இராணுவமுகாம், சில அத்தியாவசியப் பொருள்கள், ஒரு மீன்பிடி உரிமை—இந்தச் சின்னஞ்சிறு விடயங்களை நிறைவேற்றினால் ''பென்னம்பெரும்] விளைவுகள்'' ஏற்படும் என விளக்கம் அளிக்க முற்பட்டுள்ள சந்திரிகா அம்மையார், தாயக நிலம் பற்றிக் கதைக்கும்போது — தேசியம் பற்றிக் கதைக்கும் போது — தன்னாட்சி உரிமை பற்றிக் கதைக்கும்போது— சிங்கள தேசம் சமுத்திரத்திற்குள் மூழ்குகின்றது என்றல்லவா கூக்குரல் இடப்போகின்றார்! உண்மை இப்படியிருக்க, சிறிய விடயமாகிய அன்றாடப் பிரச்சினைகளை விட்டுவிட்டு, பெரிய விடயமாகிய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதற்கு நாள் குறிக்குமாறு சந்திரிகா அம்மையார் கேட்டுள்ளாரே! சந்திரிகாவின் இந்த சாகச நாடகத்தை இரசித்துத் தலையாட்டுவதற்கு, முன்னைய தமிழ் அரசியல்வாதிகளைப் போல புலிகளின் தலைமை இல்லையே!

தமிழரின் மொழி உரிமை மீது அவரது தந்தையார் கைவைத்தது போல, தமிழரின் கல்வி—வேலைவாய்ப்பு உரிமைகள் மீது அவரின் தாயார் கைவைத்ததுபோல, தமிழர்களின் வாழ்வுரிமை மீது கைவைக்க சந்திரிகா அம்மையார் முடிவு செய்துள்ளார் —

அவரின் தற்போதைய நிலைப்பாடு இதையே புலப்படுத்துகின்றது! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தீ சுமந்தோர்"

# பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக சமூக. விஞ்ஞான மன்றத்தினரின் "தீ சுமந்தோர்" நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. 25-3-95ம் திகதி நடைபெறவிருந்த காட்சி 14-05-1995 ஆம் திகதியும், 26-03-1995 ஆம் திகதி நடைபெறவிருந்த காட்சி 15-05-1995 ஆம் திகதியும் நடைபெறும். இக்காட்சிகள் முன்னர் குறிக்கப்பட்ட நேர ஒழுங்கில் இடம்பெறும்.

தலைவர்
சமூக, விஞ்ஞான மன்றம்

[35866]



தமிழீழ மக்களே!

இதோ!

**பசுப்பால்.**

உங்கள் நலன் கருதிக் குளிரூட்டிப் பாதுகாத்து நாள் முழுவதும் பால் வழங்கும் சேவையை வழங்குவது.

**யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்த**

# வானவில்

எந்நாளும் வாங்கிடுவீர்
என்றும் பயனடைவீர்.

(சி-836)



# மருத்துவக் கண்காட்சி

கருப்பொருள்:

## "சிறப்பு மருத்துவத் தகவல்கள் மூலம் சுகவாழ்வு"

எதிர்வரும் 27-03-1995 அன்று யாழ். மருத்துவ பீடத்தில் ஆரம்பிக்க இருந்த கண்காட்சி, மாணவர் நலன்கருதி 02-04-1995 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பித்து, 09-04-1995 மாலை வரை நடைபெறும்.

இக் கண்காட்சி, உடற்தொகுதி வாரியாக, அமைப்பு, தொழில், பல்வேறு நோய்கள், தடுப்பு முறைகள் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கி, சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரும் பயன் பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

கண்காட்சி, 9 பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டில் உள்ள ஒவ்வொரு பகுதியும் அதற்குரிய பிரிவினுள் செல்ல உதவும் நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகும் அத் தினத்திற்கே செல்லுபடியாகும். வளாகத்தினுள் உணவக, குளிர்பான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காட்சி நேரம்: தினமும் காலை 8-30 முதல் மாலை 5-00 மணி வரை

நுழைவுச் சீட்டு விற்பனையும் பார்வையாளர் அனுமதியும் மாலை 3 மணிக்கு நிறுத்தப்படும்

கட்டணம்: ரூபா 10/-

பாடசாலை மூலம் வருவோர் மருத்துவ பீட உடற்றொழிலியல் துறையில் தாம் கண்காட்சிக்கு வரும் திகதியைப் பதிவு செய்து நுழைவுச் சீட்டுக்களை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

கண்காட்சிக்குழு,
யாழ். மருத்துவபீடம்.

[35859]



# மரண அறிவித்தல்கள்

## இ. கனகசபாபதி

(பிரபலதவில் வித்துவான்)

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த இ. கனகசபாபதி 23-3-95 இல் காலமானார்.

இவர் சிதாலக்சுமியின் அன்புக்கணவர் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 24-3-95 அவரது இல்லத்தில் நடைபெற்று. 12 மணியளவில இணுவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
க. ஜெயகுமார்
(மகன்)

(35863)

## திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்

காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் கோவில் ஆரம்பகால ஆதினகர்த்தா சண்முகம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவி சின்னம்மா சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் முருகேசு - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, சோமசுந்தரம், மற்றும் செல்லாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம் (கணக்காளர், (சண்முகம் ஸ்ரோஸ் - வவுனியா), சரஸ்வதி, இலட்சுமி, காரைநகர் சிற்றூர்தி சேவைச் சங்க நேரக்கணிப்பாளரான இராசலிங்கம், மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், சங்கரப்பிள்ளை, சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை, அன்னபூரணம், திலகவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரா தேவி, மதியழகன், யசோதரன், யோகேஸ்வரன், கருணானந்தவல்லி, சிவனேசச்செல்வம், முருகதாஸ், சுசிலாதேவி, கலைவாணி, பரமதாஸ், சந்திரசேகரம், அருள்செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று (23-03-95) வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. இராசலிங்கம்
(நேரக்கணிப்பாளர் - மகன்)

விலாசம்:
சம்மனை அம்மன் வீதி,
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்

(35867)


வெட்டுப்புள்ளி விடயத்தில் பாரபட்சம்:

# பல்கலை. செல்லும் சந்தர்ப்பத்தை தமிழ் மாணவர் இழந்துள்ளனர்

## கொழும்பில் பேராயர் ஜெபநேசன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது கல்வியைத் தொடர்கின்றனர். ஆனால் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் வெட்டுப் புள்ளி விடயத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இதன் காரணமாக பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் அதிவண எஸ். ஜெபநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ளவத்தை பிரான்ஸிஸ் வீதியிலுள்ள தென்னிந்திய திருச்சபை தேவாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்திருக்கிறார்.

மேலும் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்த எட்டு மாணவர்களையும் இவர் தன்னுடன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அழைத்துவந்துள்ளார்.

இங்குவந்துள்ள இம்மாணவர்கள் குழுவில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்களும் யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 2 மாணவர்களும் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவனும், வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவியும் சாவகச்சேரி இந்துக் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 1 மாணவியும் இடம்பெற்றுள்ளனர்.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கையில், யாழ். பல்கலைக்கழகத்தில் மேலதிக மாணவர்களை சேர்த்துக் கொள்ளுவதற்கு வசதியுண்டு. ஆனால் வெட்டுப் புள்ளி விடயத்தில் பாரபட்சம் காட்டப்படுவதால் இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாதநிலை தோன்றியுள்ளது.

இந்த விடயம் பற்றி பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டது ஆனாலும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை — இவ்வாறு அவர் கூறினார். [ஒ-4]

## யாழ் மாணவரின் கோரிக்கை நீதி, நியாயம் மிக்கது

"மிகக் கஷ்டமான சூழ்நிலையில் கல்விபயின்ற யாழ். மாணவர்கள் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கைகள் நீதி நியாயம் மிக்கவை. அவர்களைப் போன்ற வேறு கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு —வெட்டுப் புள்ளிகளைக் குறைத்து நிர்ணயித்து—நிவாரணம் வழங்கப்பட்டுளளது."

—இவ்வாறு கூறினார் இனங்களுக்கிடையில் நீதியும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த ஜோ. செனிவிரத்ன.

பாதிக்கப்பட்ட வடபகுதி மாணவர்களின் பிரதிநிதிகளை கொழும்பில் சந்தித்துப் பேசிய பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

இம்மாணவருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது தங்களது கடமை என்றும் அவர் சொன்னார். (உ-6)

கூட்டுப்படை தலைமையக

# அனுமதிப் பத்திரம் பற்றி அரசஅதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

கூட்டுப் படைத் தலைமையகத்தில் முதன்மைப் பதவி நிலை உத்தியோகத்தராகப் பணியாற்றிய கேணல் என். குணதிலகவின் இடத்துக்கு கடந்த 13 ஆம் திகதியில் இருந்து கேணல் எல். என் ஏ. பெர்னான்டோ நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் —

இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க அதிபர், தனிப்பட்ட வர்த்தகர்கள் ஆகியோருக்கு கேணல் என். குணதிலகவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் பின் கேணல் எல். எல். ஏ. பெர்னான்டோவின் கையொப்பத்துடன் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார். [ஒ-4]

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி, மார்ச் 24

தென்மராட்சி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் கால் இறுதி ஆட்டம் இன்று வெள்ளி பிற்பகல் 3.00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இவ்வாட்டத்தில் சாவகச்சேரி ரேகா வி. கழகமும் மட்டுவில் மோகனதாஸ் வி. கழகமும் மோதவுள்ளன. (இ-117)

## ஆலயங்களில்

புண்ணாகம் விசவத்தனை ஸ்ரீ முருகமூர்த்தி கோயில் நவோத்தர சகஸ்ர (1009) மகா சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (ஒ)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வுகளில இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு உடுப்பிட்டி இளையநிலா இசைக்குழுவினர் வழங்கும் பக்தி மாலைகள் இசை நிகழ்வு இடம்பெறும்.

அறிமுகவுரையை ஆசிரியர் திரு ஸ்ரீ நடராசா வழங்குவார். (ஐ 14)

★ ★ ★

யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலய விசேட ஸ்நபன அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதனை ஒட்டி பிற்பகல் 3மணிக்கு குகாநந்தன் குழுவினரின் தவில் கச்சேரியும இரவு 7-30 மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜின் "நற்குஞ்சரக் கன்று" என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ-7)

## விலங்கியல் செய்முறை பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கு உதவும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவரின் உதவியுடன் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையினர் நடத்திவரும் விலங்கியல் (பூச்சியியல்) செய்முறைப் பட்டறையின் ஏழாவது செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரை நெல்லிபடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

அனைத்து ஜி. சி. ஈ. உயர்தர உயிரியல், விவசாய மாணவர்களும் இப்பட்டறையில் கலந்துகொள்ளலாம். [ஐ-14]

### செஞ்சிலுவை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான தேவைகள் சர்வதேச ரீதியாக அதிகரித்து வரும் இவ்வேளையில, சம்மேளனம் தனது நிதி உதவிகளைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுளளதாக ஒப்புகொண்ட திரு வெபர் இலங்கையில் செஞ்சிலுவைச் சேவையை பலப்படுத்துவதற்கு சம்மேளனம் இயன்ற வரை பாடுபடும் என்றும் அதன் மனிதாபிமான சேவைகளுக்கு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முயலும் என்றும் தெரிவித்தார். (அ)

### சேதமடைந்த---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இலக்கமும் இலங்கை வங்கியில் கணக்கு வைத்துள்ளவரின் கணக்கு இலக்கமும் ஒட்டிய தாளின் பின்புறத்தில் எழுதப்பட்டு அது வாடிக்கையாளரின் கையெழுத்துடன் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் இச்சேதமடைந்த தாள்கள் இலங்கை வங்கிக் கிளைகளில் ஏற்றுக் கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.

சென்ற தடவை இவ்வாறான சேதமடைந்த 85 லட்சம் ரூபா பெறுமதியா ரூபா நோட்டுக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இலங்கை வங்கியின் யாழ் மாவட்டக் காரியாலயத்தால் அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## பாதிக்கப்பட்ட பயிலுநர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரச சேவையில் உள்ள பயிலுநர்களை இடை நிறுத்தும் அரசின் முடிவால் பாதிக்கப்பட்டோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்துப் பயிலுநர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது (இ)

### மட்டக்களப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருட்படுத்தாது ஒவ்வொரு அறை அறையாகத் தேடுதல நடத்தினர் என்று திரு செழியன் பேரின்பநாயகம் தெரிவித்தார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் உள்ள சமயம் இது நடந்தது பயங்கரமானது என்று அவர் இது குறித்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கண்டனத் தீர்மானம் ஒன்றை மட்டக்களப்பு மாநகரசபை நிறைவேற்றி உள்ளது. [இ]

### திருமலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பிரிகேடியர் லக்கி விஜேரத்னாவுக்கு கீழ் நிர்வாகப் பணிகளைச் செய்ததாகக் கூறினார்.

பிரிகேடியர் லக்கி விஜேரத்னாவே தேடுதல், சுற்றிவளைப்புகளுக்குப் பொறுப்பாகஇருந்தார் என்றும் தென்னக்கோன் தெரிவித்தார்.

அவரும் தேடுதல் நடவடிக்கைகளுக்குத் துணையாக இருந்து வந்த பொலிஸ் சுப்ரின்டென்டன் றிச்சார்ட் விஜேசேகராவும் கொல்லப்பட்டனர்.

இதனால், 15-6-1990 ஆம் திகதியன்று திருகோணமலை ஆஸ்பத்திரியில் தேடுதல் நடவடிக்கை நடத்தப்பட்டதா என்பதனைத் தன்னால் கூறமுடியவில்லை என்றும் பிரிகேடியர் தென்னக்கோன் கூறினார்.

ஆனால் பொலீஸ் சார்ஜன்ட் சம்சுதீன் சாட்சியமளிக்கையில், குறிப்பிட்ட தினத்தில் திருமலை ஆஸ்பத்திரியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார். (அ)

### ஆலியிலுள்ள...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமது மிகச்சிறந்த கல்வித் திறமை, தகைமைகளின் மூலம் தமது சிறந்த பங்களிப்பைச் செய்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்

1948 ஆம் ஆண்டுகளில் இலங்கையர் முதன் முதலாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்லத் தொடங்கினர்.

பெரும்பான்மையானவர்கள் ... பெயர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்களில் அரைப்பங்கினர் மெல்போர்ண் நகரில் வாழ்கின்றனர். (ஒ-14)

இலங்கையருக்கு வேலை தேடி

# அமைச்சர் ராஜபக்ஷ வெளிநாடு பயணமானார்

கொழும்பு, மார்ச் 24

தொழில்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ நேற்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு புறப்பட்டுச் சென்றார். லெபனான், குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் ஆகிய நாடுகளுக்கு அவர் விஜயம் செய்கிறார்.

இந்நாடுகளில் பெரும் எண்ணிக்கையான இலங்கைத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். வெளிநாடுகளிலே இந்த தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் கண்டறிவதே அமைச்சரின் பயண நோக்கமாகும்.

அடுத்த ஆண்டிற்குள் எட்டு லட்சம் இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத்தர வேண்டும் என்ற அரசின் இலக்கை எய்தும் நோக்குடன் —

இலங்கையருக்கு வெளிநாடுகளில் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற உறுதிமொழியை அந்தந்த நாடுகளில் பெறுவதும் இவருடைய பயண நோக்கங்களில் ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## கப்பலில் செல்ல ஆசனப் பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

எதிர் வரும் ஏப்ரல்—6 ஆம் திகதி கப்பலில் செல்லவிருக்கும் பயணிகள் இன்று வெள்ளிக்கிழமை செயலகத்தில் தமது ஆசனத்துக்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ஒ-7)

### மோதல்தவிர்ப்பை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவலங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

சில தமிழர்களுடைய காணிகள் முஸ்லிம்களால் அபகரிக்கப்பட்டு விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. இது இவ்வாறிருக்க அண்மைக் காலத்தில் கந்தளாயில் முஸ்லிம்கள் வசமிருந்த அங்காடிச் சந்தைகள் அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டு பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

திருமலையில் 10 ஆம் குறிச்சி திருநகர் பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான மையவாடியில் பெரும்பான்மை சமூகத்தவர்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளார்கள். இக்காணியில் இருந்து வெளியேறும்படி நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுகளையும் கூட உதாசீனம் செய்துவிட்டு அவர்கள் தொடர்ந்து குடியிருக்கிறார்கள்.

1990 வன்செயலின் போது திருமலை வெலேன் பகுதியில் குடியிருந்த முஸ்லிம் — தமிழ் குடும்பங்கள் அங்கிருந்து துரத்தப்பட்டன. அவர்கள் ஜமாலியா அகதி முகாம்களிலும் வேறு இடங்களிலும் அவலமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய குடியிருப்பில் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் குடியேறியிருக்கிறார்கள்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இன்னும் பிரச்சினை தீர்ந்தபாடாக இல்லை. இப்பிரச்சினைகள் பற்றி கப்பல்துறை புனரமைப்பு புனர் நிர்மாண அமைச்சு மௌனம் தெரிவித்து வருவது இந்த மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களுடைய விகிதாசாரத்தை அப்பிரதேசங்களில் குறைக்கும் கெட்ட நோக்கத்தோடு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவோ என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## வெளிச்சம் நாளை வெளிவரும்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாத வெளியீடான "வெளிச்சம்" சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் நாளை வெளிவரவுள்ளது

தமிழீழ தேசியத் தலைவரின் குறிப்புரை, மாலிகா, புதுவை இரத்தினதுரை கருணாகரன், சிவஞானம் ஜெயசங்கர் ஆகியோரின் கவிதைகள் மற்றும் அடேல் ஆனின் "உடையாத விலங்குகள்" தொடர் கட்டுரை, ப. புஷ்பரட்ணத்தின் ஈழத் தமிழர் வரலாறு தொடர்கட்டுரை என்பனவும்—

பொ. தாசனுடனான நேர்காணலும் அந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகமும் "வெளிச்சம்" சஞ்சிகையினரும் இணைந்து நடத்திய கலை இலக்கியக் கருத்தரங்குக் காட்சிகளும் அதில் வெளியாகியுள்ளன. [ஐ-14]

### பேச்சில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தலைவர் 28 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருக்கும் இவ்வேளையில் சந்திரிகா இந்திய விஜயம் மேற்கொள்வது பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது

தலைவர் பிரபாகரனின் காலக்கெடு முடிவடையும் 28 ஆம் திகதி சந்திரிகா இந்தியவில் இருப்பார் என்று அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை—

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் சந்திரிகா அரசின் முயற்சியை இந்திய அரசும், தலைவர்களும் ஆதரிப்பதாகவும்—

முழு ஒத்துழைப்பையும் வழங்க உறுதி அளித்துள்ளதாகவும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்கா ரூபவாஹினிக்கு நேற்றிரவு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்திய ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்கமாட்டாது என்றும்—

இருதரப்பாரும் பேசவுள்ள விடயங்களில் அது சேர்க்கப்படவில்லை என்றும்—தூதுவர் மங்கள முனசிங்கா மேலும் தெரிவித்தார். [அ]


தெல்லிப்பழை

## இந்து இளைஞர் சங்கம்

# சமய அறிவுப் போட்டி 1994

தெல்லிப்பழை இளைஞர் சங்கத்தினரால் நடத்தப்படும் சமயஅறிவுப் போட்டி உடுவில், தெல்லிப்பழை கோட்ட மட்ட பாடசாலைகள் இராமநாதன் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கோட்டமட்ட பாடசாலைகள் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையிலும் 25-03-1995 சனிக்கிழமை நடைபெறும்.

நேர அட்டவணை வருமாறு:

பாலர்பிரிவு, ஆரம்பபிரிவு, கீழ்ப்பிரிவு
காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை

மத்தியபிரிவு, மேற்பிரிவு
காலை 10.30 தொடக்கம் 12 மணிவரை

அதிமேற்பிரிவு
காலை 11 மணி தொடக்கம் 12 மணிவரை

தலைவர்
தெ.இ.இ. சங்கம்

(சி/839)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org